**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 99** **நாள் : 17.07.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து இரண்டாம் கட்டமாக அப்புறப்படுத்தப்பட்ட 5589 வாகனங்களின் பட்டியல் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட சாலையோரங்களில் நீண்ட நாட்களாக பழுதடைந்து, போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த வாகனங்கள் காவல்துறை உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டு, வடக்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 1 முதல் 5 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் இராயபுரம் மண்டலம், கோட்டம்–58, சூளை, அவதான பாப்பையா தெருவில் மலேரியா ஸ்டோர் அருகில் அமைந்துள்ள மாநகராட்சி இடத்திலும், மத்திய வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 6 முதல் 10 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் அண்ணாநகர் மண்டலம், கோட்டம்–107, மேயர் சத்திய மூர்த்தி சாலை, கெங்குரெட்டி சுரங்கப்பாதை அருகிலுள்ள மத்திய தார் கலவை நிலைய வளாகத்திலும், தெற்கு வட்டார அலுவலகத்தின் கீழ் வரும் 11 முதல் 15 வரையுள்ள மண்டலங்களுக்குட்பட்ட பழுதடைந்த வாகனங்கள் பெருங்குடி மண்டலம், கோட்டம்–188, வேளச்சேரி–தாம்பரம் சாலையில் அமைந்துள்ள பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்திலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் எந்த வழக்குகளுடனும் சம்பந்தப்படவில்லை அல்லது எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கையிலும் நிலுவையில் இல்லை எனவும் காவல்துறையின் மூலம் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

இதுநாள் வரை 5882 வாகனங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் வசம் காவல்துறை மூலம் பெறப்பட்டுள்ளன. இந்த 5882 வாகனங்களில் முதற்கட்டமாக சான்று அளிக்கப்பட்ட 293 வாகனங்களின் எண்களின் பட்டியல் ஏற்கனவே பொதுமக்கள் பார்வைக்கு 05.06.2018 அன்று முதல் வெளியிடப்பட்டது. இரண்டாம் கட்டமாக, மீதமுள்ள 5589 வாகனங்களுக்கு காவல்துறையிடமிருந்து ஒப்புதல் சான்று தற்பொழுது பெறப்பட்டுள்ளது. அதனுடைய பட்டியலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளமான www.chennaicorporation.gov.in–ல் வெளியிடப்பட்டுள்ள 5882 வாகனங்களின் விவரங்களைப் பார்வையிட்டு, அதனடிப்படையில் உரிமை கோரும் வாகனத்தின் உரிமையாளர்கள் சம்பந்தப்பட்ட போக்குவரத்து காவல் துணை ஆணையாளர் அவர்களை 15 நாட்களுக்குள் அணுகுமாறும், அவ்வாறு 15 நாட்களுக்கு பின் உரிமம் கோராத வாகனங்களை இ–ஏலம் (E-Tender) விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**